**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.**

**C.No. 08 /2022**

2025ம் ஆண்டு மே மாதம் 14ம் நாள் புதன் கிழமை அரசு தரப்பு சாட்சி–03, திரு.கஜேந்திரன் என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 56வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.கோவிந்தராஜ், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.கஜேந்திரன் | வயது | : | |
| த.பெ/<br>க.பெ. | : | | தொழில் | : | |
| ஊர் | : | | நிலை | : | PW03 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | : | | | | |

**(எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகளின் தரப்பு வழக்கறிஞர் 355 BNSS ன் படி மனுத்தாக்கல் செய்துள்ளார்)**

**முதல் விசாரணை**

1) நான் கொம்மேடு கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கண்ணாடி, ஜன்னல், கண்ணாடி பொருட்கள் சம்மந்தமாக வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கின் புகார்தாரர் எனது பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்களும் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள்.

2) எனக்கு சம்பவம் நடந்த தேதி நினைவில்லை. சுமார் 4 வருடங்கள் இருக்கும், புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் வாய்தகராறு நடந்தது. அது என்னவென்று தெரியவில்லை. சத்தம் கேட்டு சென்று பார்த்தபோது, புகார்தாரர் மற்றும் எதிரிகள் இருவரும் அவர்கள் வீட்டு வாசலில் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள்.

3) நானும் தெருவில் குடியிருக்கும் மற்றவர்களும் அந்த சண்டையை விலக்கிவிட்டோம். மற்றவிவரங்கள் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை**

**/உண்மை நகல்/**

ஓம்/–திருமதி.S.தனலெட்சுமி,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1 (மு.கூ.பொ),
ஜெயங்கொண்டம்.